(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 16.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2020 ஒக்டோபர் 09 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

15/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை சட்ட விரோத போதைப் பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) சட்ட விரோத போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற அரச அல்லது அரச அனுசரணை பெற்றுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ள சட்ட விரோத போதைப் பொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

63/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத போதைப் பொருள் சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதன் மூலம், கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப் பொருளின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப் பொருள், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் ஊடாக சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோர்களின் கைகளுக்கு மீண்டும் சென்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) அது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

105/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2017.01.01 முதல் 2019.01.01 வரையில் —

(i) மேற்கொள்ளப்பட்ட செயற்கை கள்ளு சுற்றுவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) மேற்குறிப்பிட்ட காலத்தில் கைப்பற்றப்பட்ட செயற்கை கள்ளு லீற்றர்களின் அளவு;

(iii) மேற்படி சுற்றிவளைப்புக்களில் அறவிடப்பட்ட அபராதத்தின் பெறுமதி;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சில கள்ளு உற்பத்தியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள அளவினையும்விட களஞ்சிய வசதிகளை பேணி வருகிறார்கள் என்பதையும்;

(ii) அவர்கள் செயற்கை கள்ளு உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(iii) விசேட அதிரடிப்படை சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு இச்செயற்கைக் கள்ளினை கைப்பற்றியபோதிலும், சில மதுவரி உத்தியோகத்தர்கள் அவற்றை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது, தொழில்நுட்ப கோளாறுகளாக சுட்டிக்காட்டி, தீர்வுக் கட்டணத்துக்கு உட்படுத்தி குற்றவாளிகளை விடுதலை செய்வதாகவும்;

(iv) செயற்கை கள்ளினை உற்பத்தி செய்வதானது தொழில்நுட்பக் கோளாறல்ல, மாறாக அது சில மதுவரி உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே இந்த உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கும் நடவடிக்கையே என்பதையும்;

(v) அதனால் அரசாங்கம் அதிகளவிலான வரி வருமானத்தை இழக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) செயற்கை கள்ளு உற்பத்தியை நிறுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

166/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதியற்ற வீடுகள் எத்தனை உள்ளன;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் உள்ளதா;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

187/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று உள்ளது என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் இரண்டில் ஒன்றான மேற்படி பாடசாலையில் தரம் குறைவான கல்வி, ஆசிரியர்கள்/ஊழியர்கள் பற்றாக்குறை, தளபாடங்கள்/கட்டடங்கள் பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை உட்பட பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலைக்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் தளபாடங்களை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உட்பட மொத்தப் பணியாட்தொகுதியிலும் ஒவ்வொரு பதவிகளின் விபரங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இப்பாடசாலையில் கல்விசாரா பணியாட்தொகுதியில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், இற்றைவரையில் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) குறித்த வெற்றிடங்களை நிரப்பாது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

6.

207/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கீழ் வரும் SLIATE நிறுவனத்தில் Higher National Diploma கற்கை நெறிகளை ஆரம்பித்து 03 வருடங்கள் கடந்த போதிலும், இது வரை தற்காலிகக் கட்டிடம் ஒன்றிலே அந்நிறுவனம் இயங்குகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் காரணமாக, Information Technology, English, Tourism ஆகிய கற்கை நெறிகள் மாத்திரம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) கற்கை நெறிகளுக்கு அவசியமான ஆய்வுகூட வசதிகள் இல்லையென்பதையும்;

(iii) Accounting, Management ஆகிய கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) SLIATE நிறுவனத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு மன்னார் மாவட்ட செயலகத்தினால் மன்னார் பிரதேச செயலகப் பிரிவிற்குரிய உயிலங்குளம் பிரதேசத்தில் 05 ஏக்கர் அளவுடைய காணியொன்று அப்போதைய உயர் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகின்றது என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள SLIATE நிறுவனத்தின் நிரந்தரக் கட்டிடத்தை உலக வங்கியின் பங்களிப்புடன் ஆரம்பிப்பது தொடர்பிலான பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன், நிரந்தரக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

7.

217/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாசிப்பயறின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து பாசிப்பயறு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி பாசிப்பயறை இறக்குமதி செய்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு பாசிப்பயறை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

254/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிரேட்வெலி தோட்டம், கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலகப் பிரவில் அமைந்துள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய தோட்டம் என்பதைனை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 ஆம் ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி, தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டிடங்கள் வெளித்தரப்பினர்களுக்கு அல்லது தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

419/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(v) அவ்வாறாயின் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சார்ந்துள்ள தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

16/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தைச் சேர்ந்த (PL வகுதி) அலுவலர்கள் 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக சம்பளம் பெறுகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி PL வகுதியின் அலுவலர்களுக்கு 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியுயர்வு வழங்கப்படுவதற்கான நடைமுறையொன்று இருக்கின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தைச் சார்ந்த (PL வகுதியின்) அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்று மட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலர்களுக்கு இப்பதவியுயர்வுகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி பதவியுயர்வு வழங்கப்படும் தரங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பதவியுயர்வுகள் 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படுமா என்பதையும்;

(v) இல்லையெனில், பின்பற்றப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(vi) தற்போதுள்ள நிறைவேற்று அலுவலர்களுக்கு மேலதிகமாக 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படுகின்ற பதவியுயர்வுகளின் வாயிலாக ஒவ்வொரு டிப்போவிற்கும் புதிதாக நியமிக்கப்படுகின்ற நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

64/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட விரோத போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டமைக்கு சனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் அது சார்பாக வழங்கப்பட்ட பரிசுத் தொகைகள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி சுற்றிவளைப்புக்களின் போது கைப்பற்றப்பட்ட போதைப்பொருள், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்களின் கைகளுக்குச் சென்றடையச் செய்தல் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

106/2020

கௌரவ புத்திக பத்திறன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கள்ளு உற்பத்திக் கைத்தொழில் வியாபித்துள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019.12.31 ஆம் திகதியளவில் இலங்கையில் உரிமம் பெற்ற கள்ளு உற்பத்தியாளர்கள்/நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொர் உற்பத்தி ஆலைக்கும் ஏற்புடைய அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு வரையறை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அந்த அளவுகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கள்ளு உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனோம்புகைக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

167/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் காணி உரித்துக்கள் அற்ற வீடுகளின் எண்ணிக்கை யாது?

(ii) மேற்படி வீடுகளிற்கு உரித்துக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் என்ன;

என்பன பற்றி இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

190/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள கிரிக்கட் விளையாட்டு சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 25 கிரிக்கட் சங்கங்கள் உள்ளன என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்காமைக்கு;

(ii) பதிவைக் கோரி கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கம் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்தும் இற்றை வரையில் பதிவு செய்யாமைக்கு;

காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) 2010 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கத்திற்காக விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உதவிகள் யாவை என்பதையும் அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

15.

218/2020

கௌரவ மொஹமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கௌப்பியின் அளவு;

(ii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை;

(iii) எந்த நாடுகளில் இருந்து கௌப்பி இறக்குமதி செய்யப்பட்டது;

(iv) கௌப்பி இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலங்கைக்கு கௌப்பி இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 1/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 2/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 3/2020

கௌரவ ஹேஷா விதானகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக் கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 4/2020

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 6/2020

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக ஏதேனுமொரு நிகழ்ச்சித்திட்டத்தை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 8/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் (9 ஆம் தரம் வரை) அவர்களது சமயங்களின் அடிப்படையில் அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது

10.

பா. 10/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்றினைத் தாபித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 11/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா.12/2020

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற் துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 13/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

14.

பா. 14/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 15/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 16/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 17/ 2020

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

18.

பா. 18/2020

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 19.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 26 ஆம் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 19(உ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 பிரிவின் கீழ் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 26 ஆம் திகதிய 2155/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.